admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்



தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-22772060 9443699066






| Vol: 03 | Issue: 232 | 4 Pages | 30.06.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 232 | 4 பக்கங்கள் | 30.06.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே**
**கெடுக்குந் தகைமை யவர்**

**விளக்கம்:**
கடிந்து அறிவுரைக் கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரை கெடுக்கும் ஆற்றல் உள்ளவர் எவர் இருக்கின்றனர்.

## தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52பிறந்த தினத்தை முன்னிட்டு 520 பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன



தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஆங்காங்கே பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மாணவ மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை விளையாட்டுப் போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன அதன் ஒரு பகுதியாக மணலி அண்ணா சிலை அருகே சுமார் 520 பொது மக்களுக்கு தையல் மிஷின்கள் கிரைண்டர்கள் மிக்ஸிகள், 5கிலோ அரிசி மூட்டைகள் புடவைகள் குடம் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கினர்இந்தநிகழ்ச்சியில்சிறப்புஅழைப்பாளராகதிருவெற்றியூர்சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிசாரதி பிரகாஷ் ஏற்பாடு செய்திருந்தார் இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் மாவட்ட இணை செயலாளர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் சீனிவாசன், மாவட்ட துணைச் செயலாளர் மாரி, செயல்வீரர்கள் சூரிய பிரகாஷ், சரவணன், லோகேஷ்,முரளி, நாகராஜ் சிவக்குமார், ரகுராம்,கேபிள் ராணி, லக்ஷ்மி ,மதிவாணன்,ராஜவேல்,கணேஷ், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்



தமிழக முதல்வர் கழகத் தலைவர் திரு அண்ணா C.ஜோசப் விஜய் அவர்களின் 52 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் எங்கள் ஆசான் அண்ணன் N. ஆனந்த் அவர்களின் ஆசியுடன் திருவொற்றியூர் கிழக்கு பகுதி நிர்வாகி தளபதிக்காக JK.சசிதரன் அவர்களின் ஏற்பாட்டில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது

திருவள்ளுவர் தென்கிழக்கு மாவட்ட கழக செயலாளர் RK.மணிகண்டன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இரத்ததான முகாம் நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். நிகழ்ச்சியில் : மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கலக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் & வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பிற அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி பங்களிப்பாளர்கள் : Dr. இன்பன்ட்ராஜ், மோசஸ், சரவணன், ஹரிஷ் பாபு, கார்த்திக், 14 வது வட்ட செயலாளர் செல்வா, மாஸ்டர் ராஜேஷ், யுவராஜ், கிஷோர், அசோக் பிரசாந்த், ஜஸ்வந்த், மானஸ், தியாகராயபுரம் சதீஷ், அல்உபேத், பாக்ஸர் ஜாபர், அலி, காதர்,சரத், பிரான்சிஸ், மார்க்கெட் சிவா. முகிலன்

## முதல்வர் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ், அதிகாரிகளின் மாநாடு

முதல்வர் விஜய் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ், அதிகாரிகளின் மாநாடு நடைபெற்று வருகிறது

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், மற்றும் நாளை தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎஃப்எஸ் அதிகாரிகளுடனான மாநாடு நடைபெற்று வருகிறது இந்த மாநாட்டில் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் என பல அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும், இந்த ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு, வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆட்சிநிர்வாகம்உள்ளிட்டவைகுறித்துவிரிவாகஆலோசனைநடத்தப்படுகிறது

தவெக தலைவர் விஜய் தலைமையிலான ஆட்சி அமைந்த பின் முதல் முறை கூடும் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎஃப்எஸ் அதிகாரிகள் மாநாடு ஆகும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும்

வளர்ச்சி திட்டங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவை குறித்து ஆய்வு செய்ய ஆண்டுதோறும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎஃப்எஸ் அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

முன்னதாக கடந்த 2025 ஆம் ஆண்டு நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் அப்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎஃப்எஸ் அதிகாரிகள் மாநாடு நடைபெற்றது. இதையடுத்து இன்று முதலமைச்சர் விஜய் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்று வருகிறது இந்த மாநாடு மூன்று பிரிவிலாக நடத்தப்படுகிறது முதல் பிரிவில் மாவட்ட ஆட்சியர் காவல் துறை அதிகாரிகள் இணைந்து கலந்து கொள்கின்றனர் இதில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை தடுக்கும் வகையில் ரவுடிகளை கட்டுக்குள் கொண்டு வருவது, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களை தடுப்பது தொடர்பான ஆலோசனைகள் நடத்தப்பட உள்ளது

இரண்டாவது பிரிவாக மாவட்ட ஆட்சியர் மட்டும் பங்கேற்கும் மாநாடு நடைபெற உள்ளது அதில் அனைத்து துறைகளின் பயன்களும் மக்களுக்கு எளிதாக சென்றடைந்துள்ளதா, அரசின் திட்டங்களை மக்கள் எளிதாக விண்ணப்பிக்க முடிகிறதா உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது

மூன்றாவது பிரிவில் மாவட்ட ஆட்சியர்காவல்துறை அதிகாரிகள் இணைந்து மாநாடு நடத்தப்பட உள்ளது இதில் சுற்றுச்சூழல் வனபாதுகாப்பு விலங்குகளை பாதுகாப்பது உள்ளிட்ட தொடர்பாக ஆலோசிக்கப்பட உள்ளது இரண்டுநாட்கள்மாநாட்டின்நிறைவில்தமிழகமுதல்வர்விஜய்உரையாற்றுவது குறிப்பிடத்தக்கது

# பழனி பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் தொடரும் சர்ச்சைகள்: பாதிக்கப்பட்ட பெண் பல கேள்விகள் எழுப்புகிறார்



► திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்

► பழனி தாசில்தார் திருமங்கல பாண்டியன்

► திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளர்

► "12.06.2026 அன்று பாதிக்கப்பட்ட பெண் அளித்த CM Cell புகார் தொடர்பாக மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் தாசில்தார் ஆகியோர் தனித்தனியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதை தெரிவித்து, தற்போதைய நிலை அறிக்கையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."



► மதனகோபால் மருத்துவர் வயது 68 மற்றும் இவரது மனைவி அமுதவல்லி வயது 63



► சார்பாய்வாளர் விஜய் பழனி நகர் காவல் நிலையம்

► பழனி நகரின் முன்னாள் டி.எஸ்.பி. தனஜெயன்

► திண்டுக்கல் முன்னாள் IPS சரவணன்

► திண்டுக்கல் மாவட்ட முன்னாள் காவல் கண்காணிப்பாளர் பிரதீப்




► அதிகாரிகள் அனைவருக்கும் புகார் வாயிலாக புகார் அனுப்பப்பட்டதற்கான ஆதாரம் இதோ அனுப்பப்பட்ட தேதி நேற்று மற்றும் நேற்றுக்கு முன் தினம்

► பழனி நகர காவல் நிலைய அதிகாரிகள் மீது நடவடிக்கை கோரி பாதிக்கப்பட்ட பெண் கோரிக்கை

► பழனி நகர காவல் நிலையத்தைச் சேர்ந்த டி.எஸ்.பி, இன்ஸ்பெக்டர் மற்றும் மூன்று எஸ்.ஐக்கள் உட்பட தவறிழைத்த பாதிக்கப்பட்ட பெண் குற்றம்சாட்டியுள்ளார். இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாதிக்கப்பட்ட பெண்ணை நேரில் அழைத்து விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பழனி பகுதியில் மருத்துவர் ஒருவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டு வழக்கில், விசாரணை மற்றும் காவல்துறையின் நடவடிக்கைகள் குறித்து பாதிக்கப்பட்ட பெண் பல முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் அளித்த முதல் புகாரின் அடிப்படையில் உடனடியாக FIR பதிவு செய்யப்படாமல், சுமார் 32 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதாகவும், பின்னர் இரண்டாவது புகாரிலும் இரண்டு மாதங்களுக்கு மேலாக தாமதித்து FIR பதிவு செய்யப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. 2025 செப்டம்பர் மாதத்தில் நக்கீரன், ஜூனியர் விகடன், தினமலர், தினத்தந்தி உள்ளிட்ட ஊடகங்களில் வழக்கு தொடர்பான செய்திகள் வெளியான பின்னரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தனர் என்பது குறித்து விளக்கம் கோரப்பட்டுள்ளது.

மேலும், FIR பதிவு செய்யப்பட்ட உடனேயே மருத்துவர் பல நாட்கள் தலைமறைவாக இருந்ததாகவும், அதற்கு யாருடைய ஆதரவு இருந்தது என்பது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வழக்கறிஞர், FIR-ல் தவறான சட்டப்பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறி அவற்றை மாற்றுமாறு பலமுறை கோரிக்கை வைத்த போதும், அதிகாரிகள் காலதாமதம் செய்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. முதல் புகார் நிராகரிக்கப்பட்டது, காவலர் சார்பில் எழுதப்பட்டதாகக் கூறி மிரட்டி கையெழுத்து பெறப்பட்டதாக கூறப்படும் விவகாரம், மருத்துவ பரிசோதனைக்கு உடனடியாக அனுப்பப்படாதது, மூன்றாவது மற்றும் நான்காவது புகார்கள் மீது ஆறு மாதங்களுக்கும் மேலாக நடவடிக்கை எடுக்கப்படாதது உள்ளிட்ட பல அம்சங்களும் கேள்விக்குறியாக உள்ளன.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டில் மகளிர் ஆணையம், மனித உரிமைகள் ஆணையம், மருத்துவ கவுன்சில், முதலமைச்சர் தனிப்பிரிவு (CM Cell), மாவட்ட ஆட்சியர் மற்றும் தாசில்தார் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட மனுக்கள், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தாசில்தார் முன்னிலையில் அளிக்கப்பட்ட வாக்குமூலம் உள்ளிட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வாழ்வாதாரம் கடந்த 11 மாதங்களாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், வழக்கில் ஏற்பட்ட ஒவ்வொரு காலதாமதத்திற்கும் யார் பொறுப்பு, ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, அதிகாரிகள் தங்கள் கடமையை முறையாக நிறைவேற்றினார்களா என்பது குறித்து மாநில அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்து ஆவணங்களும் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு வரப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

மேலும், வழக்கில் தொடர்புடைய சில நபர்களுக்கிடையே பணப் பரிமாற்றம் மற்றும் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஆடியோ ஆதாரங்கள் இருப்பதாகவும், அந்த ஆடியோவில் இடம்பெறும் நபர்கள் தொடர்பாக விரிவான சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"நீதிக்காக தொடர்ந்து போராடி வரும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்; வழக்கில் ஏற்பட்டுள்ள அனைத்து தாமதங்களும் வெளிச்சத்துக்கு வர வேண்டும்" என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

## கூடலூரில் விஸ்வ ஹிந்து பரிஷத் புதிய நிர்வாகிகள் தேர்வு: உற்சாக ஊர்வலத்துடன் கொடியேற்றி, இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



தேனி மாவட்டம் கூடலூரில், விஸ்வ ஹிந்து பரிஷத் (VHP) அமைப்பின் புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான ஆலோசனைக் கூட்டம் மிக உற்சாகமாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தென் மாநிலத் தலைவர் அம்பி ராமகிருஷ்ணன் தலைமைதாங்கினார். இதில்அமைப்பின் வளர்ச்சி, எதிர்கால செயல்பாடுகள் மற்றும் சமூகப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. தொடர்ந்து, புதிய நிர்வாகிகள் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர் . அதன்படி, கூடலூர் நகரத் தலைவராக ஜெகன், துணைத் தலைவராக முத்துராஜ், செயலாளராக ரமேஷ் உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளாகப் பொறுப்பேற்றனர் .

புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதிய பஸ் ஸ்டாண்டில் இருந்து பழைய பஸ் ஸ்டாண்ட் வரை உற்சாக ஊர்வலம் நடைபெற்றது. இதில் ஏராளமான நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்துகொண்டு, அமைப்பின் கொடியை ஏற்றி முழக்கங்களை எழுப்பினர் .

நிகழ்ச்சியின் நிறைவாக, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது. புதிய நிர்வாகிகளுக்குப் பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து அமைப்பின் பணிகள் சிறக்க வாழ்த்தினர்

## எந்த நிகழ்ச்சி நடத்தினாலும் செலவினம் சிறு சௌந்தரபாண்டி செய்து கணக்கு வழக்கு

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவு யூனியனில் (சங்கத்தில்) உறுப்பினராக உள்ள ஆடலரசு இணைப்பதிவாளர் அலுவலகத்தின் மேற்கொள்ளப்பட்டுவரும்அனைத்து அரசு நிகழ்ச்சிகளுக்கும் மாவட்டத்தில் உள்ள 122 கூட்டுறவு கடன் சங்கங்களில் இருந்தும் நியாய விலை கடை ஊழியர்களிடமிருந்தும் வசூல் செய்து எந்த நிகழ்ச்சி நடத்தினாலும் செலவினம் சிறு சௌந்தரபாண்டி செய்து கணக்கு வழக்கு பார்த்து வருகிறார்.

திமுக முன்னாள் அமைச்சர் சாமு நாசருக்கு மிகவும் நெருக்கமானவரான இவர் இன்றி இணை பதிவாளர் அலுவலகத்தில் ஒன்றும் அசையாது கூட்டுறவு இணைப்பதிவாளர் அலுவலக கட்டிடம் உட்பட கூட்டுறவு யூனியன் மூலமாகவே கட்டிடங்கள் கட்டி பராமரிக்கப்படுகிறது என்று ஊழியர்கள் கூறுகின்றனர் திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு அதிகாரிகள் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் மிகப்பெரிய அரசமரம் வளர்ந்து உரிய பராமரிப்பின்றி கிடைக்கிறது இப்படி அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்யாமல் இந்த அலுவலகம் செயல்படும் நிலையில் இணை பதிவாளராக உள்ள ஜெயஸ்ரீக்கு கூடுதல் பொறுப்பாக ஆடல் அரசு செயல்பட்டு வருவது இங்கு பணியாற்றும் மற்ற ஊழியர்களையும் மாவட்டத்தில் பணியாற்றிடும் கூட்டுறவு கடன் சங்க ஊழியர்களையும் உயர் அதிகாரிகளையும் கூட முகம் சுளிக்க செய்துள்ளது மாவட்டத்தை யாருக்கு பணி மாறுதல் புதிய பணி நியமனம் உள்ளிட்ட எந்த தேவைகளுக்கும் இவரையே இந்த அலுவலகத்தில் அணுகும் நிலை உள்ளது ஜே ஆர் ஐ அதாவது இணை பதிவாளர் ஜெயஸ்ரீ சந்திக்க வேண்டும் என்றால் கூட ஆடலரசை தாண்டி யாராலும் அவரை அணுக முடியாத ஒரு நிலை உள்ளது.

பல நல்ல திட்டங்களை கூட்டுறவு கடன் சங்கங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் ஏ ஐ தொழில்நுட்பத்தில் மக்கள் கடன் பெறும் புதிய அணுகு திட்டத்தை கூட யோசித்து செயலாற்ற துடித்து வரும் இளம் பெண் அதிகாரியாக உள்ள கூட்டுறவு இணை பதிவாளரான ஜெயஸ்ரீ செயல்பாட்டை முடக்கும் விதமாக அவரை சந்திக்க அலுவலகத்திற்கு வரும் யாரையும் ஆடலரசு சந்திக்க விடுவதில்லை என்று வேதனையை பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாடி பகுதியில் அமைந்துள்ள தனியார் பள்ளியில் மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பேரணி



சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாடி பகுதியில் அமைந்துள்ள தனியார் பள்ளியில் மாணவ மாணவிகள் விழிப்புணர்வுபேரணிநடைபெற்றது இந்தப் பேரணியை ஆவடி இணை ஆணையர் சிவகுமார் துவக்கி வைத்தார்

சென்னை புறநகர் பகுதியான அம்பத்தூர் அடுத்த பாடி பகுதியில் அமைந்துள்ள லட்சுமி மெட்ரிகுலேஷன் பள்ளியில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சி சமூக ஆர்வலர் கொரட்டூர் சிவா அவர்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது இந்த பேரணியை ஆவடி காவல் இணை ஆணையர் சிவகுமார் கொடி அசைத்து துவக்கி வைக்க வைத்தார் இந்த பேரணியானது பல்வேறு வாசகங்கள் கொண்டு பாதகைகளை மாணவ மாணவிகள் கையில்ஏந்திபல்வேறுவிழிப்புணர்வு வாசகங்கள் கொண்டு பேரணியாக மூன்று கிலோமீட்டர் சென்று பள்ளியில் நிறைவடைந்தது பின்பு அனைத்து மாணவ மாணவிகளும் போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம் என்று உறுதிமொழி எடுத்தனர் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அம்பத்தூர் மதுவிலக்கு உதவி ஆணையர் கலியசுந்தரம் அம்பத்தூர் உதவி ஆணையர் என் எஸ் குமார் கொரட்டூர் காவல் ஆய்வாளர் ஜார்ஜ் மில்லர் அம்பத்தூர் மதுவிலக்கு ஆய்வாளர் ஜெகநாதன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் 100க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், மாவட்ட கலெக்டர்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர் கைது: கனிமொழி கண்டனம்



சென்னை, ஜூன் 30

த.வெ.க. அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த வீடியோ குறித்து விளக்கமளித்த அமைச்சர் டி.சரத்குமார், தனது குழந்தைக்கு மாத்திரையை பொடியாக்கி கொடுத்ததாகவும், தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். இருப்பினும், இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, அமைச்சர் டி.சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் சென்னை எழும்பூரில் தி.மு.க. மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டத்திற்கான மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு உரிய அனுமதி பெறாததால் மேடை அமைக்க அனுமதிக்க முடியாது என கூறினர். இதையடுத்து தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகளுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் கைது செய்து காவல்துறை வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.

இந்த நிலையில் திமுக துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்துவது போல வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமார் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு, கழகத்தினரை அராஜகமாக கைது செய்திருக்கிறது தவெக அரசு.

தங்களை தாங்களே ஜனநாயகசக்தி என்று சொல்லிக்கொள்ளும் தவெக அரசு, எதிர்க்கட்சியினர் அறவழியில் போராட்டம் நடத்தவே அனுமதி மறுக்கிறது.

கைது செய்யப்பட்ட திமுகவினரை உடனடியாக விடுதலை செய்வதோடு, குற்றச்சாட்டுக்கு உள்ளான அமைச்சர் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை த.வெ.க. அரசு மிரட்டுகிறது’ மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜூன் 30

தனது போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல்அமைச்சரின் எண்ணம் நீண்டகாலம் நீடிக்காது என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த வீடியோ குறித்து விளக்கமளித்த அமைச்சர் டி.சரத்குமார், தனது குழந்தைக்கு மாத்திரையை பொடியாக்கி கொடுத்ததாகவும், தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும், இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, அமைச்சர் டி.சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் சென்னை எழும்பூரில் தி.மு.க. மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டத்திற்கான மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு உரிய அனுமதி பெறாததால் மேடை அமைக்க அனுமதிக்க முடியாது என கூறினர்.

இதையடுத்து தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகளுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் கைது செய்து காவல்துறை வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.

இந் நிலையில், விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை த.வெ.க. அரசு மிரட்டுகிறது என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

“போதைப் பொருள் பயன்படுத்தியது போல், “Thug Life” Story போட்ட அமைச்சருக்கு எதிராகப் போராட்டம் செய்த தி.மு.க.வினர் கைது! த.வெ.க. ஆட்சியை விமர்சிப்பதால், முன்னாள் அமைச்சர் சிவசங்கர் மீது வழக்கு! முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீட்டில் ரெய்டு!

இப்படி விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை மிரட்டியும், ஊடகங்களுக்கு பதில் அளிக்காமலும் கட்டமைக்கப்பட்ட, தன் போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல் அமைச்சரின் எண்ணம் நீண்டகாலம் நீடிக்காது!

அதிகாரத்தை வைத்து ஆட்டம் போடுபவர்களின் அகங்காரம் அடங்கும்! “டேக் டைவர்ஷன்... டேக் டைவர்ஷன்” என ஓடும் இந்த ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவார்கள்!”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசு வேலை வாங்கித்தருவதாகக்கூறி மோசடி: திமுக முன்னாள் அமைச்சர் சிவசங்கருக்கு சம்மன்



சென்னை, ஜூன் 30

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி திமுக எம்.எல்.ஏ. சிவசங்கர். இவர் கடந்த திமுக ஆட்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சராக செயல்பட்டார். மேலும், மின்சாரத்துவ்றையும் கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டது.

இதனிடையே, தனது மகனுக்கு போக்குவரத்துத்துறையில் அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி ரூ. 23 லட்சம் லஞ்சம் பெற்றுக் கொண்டு ஏமாற்றியதாக முன்னாள் அமைச்சர் சிவசங்கரின் உதவியாளராக கூறப்படும் இளஞ்செழியன் மீது ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி ஒருவர் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், சிவசங்கரின் உதவியாளராக கூறப்படும் இளஞ்செழியனை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கடந்த 24ம் தேதி கைது செய்தனர். மேலும், கைது செய்யப்பட்ட இளஞ்செழியனிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அரசு வேலை வாங்கித்தருவதாக ரூ. 23 லட்சம் மோசடி செய்த வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் சிவசங்கருக்கு மத்திய குற்றப்பிரிவு போலீசார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

போக்குவரத்து துறையில் அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி ரூ. 23 லட்சம் மோசடி செய்ததாக இளஞ்செழியன் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் சிவசங்கரின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி சென்னை காவல் ஆணையரகத்தில் அளித்த புகாரில், சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சர் சிவசங்கரை சந்திக்க இளஞ்செழியன் ஏற்பாடு செய்தார். இளஞ்செழியனின் ஏற்பாட்டில் தலைமை செயலகத்தில் சிவசங்கரை சந்தித்தோம். அப்போது, எனது மகனுக்கு போக்குவரத்து துறையில் வேலை உறுதி என சிவசங்கர் நம்பிக்கை கொடுத்தார். மகன் வேலைக்காக நான் கொடுத்த ரூ. 23 லட்சம் பணம் தன்னிடம் வந்து சேர்ந்துவிட்டதாக சிவசங்கர் உறுதிபடுத்தினார். ஆனால், பணத்தை வாங்கிக்கொண்டு வேலை கொடுக்காமல் இளஞ்செழியனும், முன்னாள் அமைச்சர் சிவசங்கரும் தன்னை ஏமாற்றிவிட்டனர்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புகாரின் அடிப்படையில் மோசடி வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் சிவசங்கரின் பெயரை சேர்த்துள்ள மத்திய குற்றப்பிரிவு போலீசார், அவரை விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பியுள்ளனர்.

அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி ரூ. 23 லட்சம் பணத்தை வாங்கிக் கொண்டு மோசடி செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் சிவசங்கரின் பெயரில் சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உதவி பேராசிரியர்கள் தேர்வில் சிலரது மதிப்பெண்களில் மட்டும் வண்ண அடையாளம் ஏன்? அன்புமணி கேள்வி



சென்னை, ஜூன் 30

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 2708 உதவிப் பேராசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டித்தேர்வின்விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் குளறுபடிகளும், முறைகேடுகளும் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கே இன்னும் விளக்கம் அளிக்கப்படாத நிலையில், சில தேர்வர்களின் மதிப்பெண்களில் வண்ண அடையாளங்கள் இடம் பெற்றிருப்பது புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பல்லாயிரக்கணக்கான தேர்வர்களின்எதிர்காலம்தொடர்பான விஷயத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் பொறுப்பின்றி நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது.

ஆங்கிலப் பாட உதவி பேராசிரியர் பணிக்கு நடத்தப்பட்ட தேர்வுகளுக்கான மதிப்பெண் பட்டியலில், சில இடங்களில் நீலம், சில இடங்களில் மஞ்சள் வண்ணங்களில் குறியீடுகள் இடம் பெற்றுள்ளன. அவர்களுக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ மதிப்பெண்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு இருக்கலாம் என்று தேர்வர்கள் சார்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தேர்வர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஐயங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் போக்க வேண்டும்.

இதே பணிக்கான போட்டித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடுகளில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகளை பாட்டாளி மக்கள் கட்சி தான் முதலில் அம்பலப்படுத்தியது. உதவி பேராசிரியர் பணிக்கான தேர்வுகளில் முதல் தாளில் அதுவும் விருப்பப்பாடத்தில் 111 மதிப்பெண் எடுத்த ஒருவர், இரண்டாம் தாளில் பூஜ்ஜியம் மதிப்பெண் எடுப்பதும், முதல் தாளில் 54, அதாவது 36 சதவீதம் மதிப்பெண் எடுத்த ஒருவருக்கு, இரண்டாம் தாளில் 49, அதாவது 98 சதவீதம் மதிப்பெண் பெறுவதும் சாத்தியமற்ற ஒன்றாகும்.

உதவி பேராசிரியர் பணிக்கான போட்டித் தேர்வுகளில் அடுத்தடுத்து குற்றச்சாட்டுகள் எழுவது ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அழகல்ல. ஆயிரக்கணக்கிலும், லட்சக்கணக்கிலும் தேர்வர்கள் பங்கேற்கும் தேர்வுகளை நடத்தும் ஆசிரியர் தேர்வு வாரியம் அவற்றில் குளறுபடிகள், முறைகேடுகள் நடக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர் தேர்வு வாரியம் ஐயங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு பாலிடெக்னிக்குகளுக்கு விரிவுரையாளர்களை தேர்வு செய்வதில் 2017 ஆம் ஆண்டில் நடந்த முறைகேடுகளையும், அது தொடர்பாக இப்போதும் விசாரணை நடத்தப்பட்டு வருவதையும் தமிழ்நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. தவறான காரணங்களுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் அதன் மீதான நன்னம்பிக்கையையும், நன்மதிப்பையும் இழந்து வருகிறது. உதவிப் பேராசிரியர் பணிக்கான போட்டித் தேர்வுகளில் முறைகேடுகள் நடந்ததாக அடுத்தடுத்து எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்த அரசு ஆணையிட வேண்டும். ஏதேனும் முறைகேடுகள் நடந்திருந்தால் அதற்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# தவெக ஆட்சியில் சீர்குலைந்து இருக்கும் சட்டம், ஒழுங்குக்கு எதிராக ஆர்ப்பாட்டம்: முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



தவெக அமைச்சர் சரத்குமாரின் இந்த செயலுக்கு முதலமைச்சர் இதுவரை வாய் திறக்காமல் இருப்பது ஏன்? அநாகரிக செயலில் ஈடுபடும் அமைச்சரை குறைந்தபட்சம் பதவி நீக்கம் செய்ய வேண்டியது முதல்வரின் கடமை. அமைச்சர் சரத்குமாரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் முன்னாள் அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேட்டி

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே தமிழக அரசுக்கு எதிராக திமுக மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. போராட்டத்திற்காக மேடை அமைக்கும் பொழுது முறையாக அனுமதி கொடுக்காமல் காவல் துறையினர் அவர்களை குண்டு கட்டாக கைது செய்தனர்.

இந்தநிலையில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா. சுப்பிரமணியன் தலைமையில் ராஜரத்தினம் மைதானம் அருகே தவெக அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, தவெக அமைச்சர் சரத்குமார் பதவி விலக வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தவெக அரசுக்கு எதிராக கண்டனம் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தவெக அரசின் சாயம் வெளுத்து போச்சு, போதை என்பது மாத்திரையா, கொக்கைன் என்ன சாக்லேட்டா என்பது போன்ற கண்டன முழக்கங்களை எழுப்பி கோஷமிட்டனர்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் மா. சுப்பிரமணியன்,

தமிழ்நாடு அரடை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த முறையாக அனுமதி கேட்டு இருந்தோம். கடந்த திமுக ஆட்சியில் போராட்டம் நடத்த காவல்துறையினரிடம் அனுமதி கேட்டு வந்தால் முறையாக போராட்டம் நடத்துவதற்கான அனுமதி என்பது கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எழும்பூர் அருகே இன்று திமுக மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது. காவல் துறையினர் அனுமதியை முறையாக தராமல் காலையிலேயே கைது செய்துள்ளனர்.

சென்னையில் பல்வேறு இடங்களில் இருந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதற்காக ஏராளமானோர் வந்து கொண்டுள்ள நிலையில், இதற்கு முறையாக அனுமதி தராமல் காவல்துறையினர் அதனை தடுக்கின்றனர். கடந்த ஒன்றரை மாதத்தில் தமிழ்நாட்டின் சட்டம், ஒழுங்கு என்பது முற்றிலுமாக சீர் குலைந்து கேள்விக்குறியாகி உள்ளது.

குடிநீர், மின்சாரம் போன்ற பல்வேறு பிரச்சனைகளை தமிழ்நாட்டில் மக்கள் சந்தித்து வரும் வேளையில் மறைந்த பாக்யராஜ் உடல் அஞ்சலிக்காக அவரது வீட்டில் இருக்கும் சூழலில் சுமார் 4 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருக்கும் நிலையே இருந்தது.

திமுக ஆட்சியில் 80 லட்சம் மாணவர்களுக்கு போதைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தி சட்டம் ஒழுங்கு சீர்படுத்தினோம். ஆனால் தவெக ஆட்சியில் அது முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது.

அண்மையில் சேப்பாக்கம் மைதானத்தில் தவெக அமைச்சர் சரத்குமார் செய்த போதை பொருள் தொடர்பான செயல் என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. சில நாட்களுக்கு முன்பு அமைச்சர் சரத்குமார் வீடியோ வெளியானது. எதற்கு டெபிட் கார்டு? எதற்கு 500 ரூபாய் ? இது லேமினேஷன் செய்யப்பட்டவை என்பதால் அந்த உயர்ரக போதை பொருள் இதில் ஒட்டது. அதனால் தான் இவை பயன்படுத்தப்பட்டது. புத்திசாலி தனமான போதைப்பொருளை உபயோகிப்பவர்கள் இப்படி தான் செய்வார்கள். அதைத் தான் அமைச்சரும் செய்திருக்கிறார்.

குழந்தைக்கு மாத்திரை கொடுக்கத்தான் அப்படி செய்தேன் என அமைச்சர் விளக்கம் கூறுகிறார். எந்த 5 வயது குழந்தைக்கும் மருத்துவர் மாத்திரை தருவதில்லை. அவரின் சமூகவலைதளங்களில் இருந்தே அந்த வீடியோ வெளியாகி இருக்கிறது. இதில் இருந்து தப்பிக்க தொடர் பொய்களை சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு போதைப்பொருள் விழிப்புணர்வு நடத்துகிறோம் என்ற பெயரில் மாரத்தான் நடத்திய அடுத்த நாளே உயர்ரக போதைபொருளை பொதுவெளியில் வைத்து அமைச்சர் நசுக்குவது போன்ற ரீல்ஸ் வந்துள்ளது.

உடனடியாக முதலமைச்சர் இதற்கு பதில் சொல்ல வேண்டும் அது அவரின் ஜனநாயக கடமை. முதல்வர் தற்போது வரை இது குறித்து பதில் சொல்லவும் இல்லை. அமைச்சரின் மேல் எந்தவித சட்ட நடவடிக்கையையும் எடுக்கவும் இல்லை.

அவரை குறைந்தபட்சம் பதவியில் இருந்து கூட நீக்கவில்லை. பொய்யான பொருந்தாத காரணங்களை இந்த அமைச்சர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

அநாகரிக செயலில் ஈடுபடும் அமைச்சரை குறைந்தபட்சம் பதவி நீக்கம் செய்ய வேண்டியது முதல்வரின் கடமை முதல்வர் அதை செய்ய வேண்டும். அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும். அவரை கண்டிக்க வேண்டும்.

இன்றைக்கு இதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட அனுமதி கூறிய நிலையில் தீவிரவாதிகளை அடக்குவது போல மேடை போடுவதை தடுத்து இருக்கிறார்கள் மேடை போட வந்தவர்களையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இது போன்று தொடர் சம்பவங்கள் தொடரும் என்றால் எங்களுடைய தலைமை அறிவுறுத்தலின் பேரில் தொடர் போராட்டங்களை அறிவிப்போம் என்றும் கூறினார்.

# ALCHEMY'26 - மாணவர்கள் கலைக் கண்காட்சி



சென்னை. கேகே நகரில் ALCHEMY'26 மாணவர்கள் கலைக் கண்காட்சி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வை சோழமண்டல சமகால கலை மையத்தின் செயலாளரும், பன்முகத் திறன் கொண்ட கலைஞருமான திரு. ஜேக்கப் ஜெபராஜ் மற்றும் விளக்குக்கடை நிறுவனத்தின் நிறுவனர் திருமதி. ராஜலட்சுமி ஆகியோர் குத்துவிளக்கேற்றி இனிதே தொடங்கி வைத்தனர்.

இக்கண்காட்சியில் மாணவர்களின் படைப்பாற்றல், அர்ப்பணிப்பு மற்றும் கலைத்திறன் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கண்காட்சியில் இடம் பெற்ற மாணவர்களின் ஓவியங்கள் மற்றும் கலைப்படைப்புகளை இரு சிறப்பு விருந்தினர்களும் மனமாரப் பாராட்டி, எதிர்காலத்திலும் கலைத்துறையில் தொடர்ந்து சிறந்து விளங்க வாழ்த்துகளையும் ஊக்கத்தையும் வழங்கினர்.

திரு. ஜேக்கப் ஜெபராஜ் அவர்கள், மாணவர்களுடன் நேரடியாக கலந்துரையாடி, கலைத்துறையில் முன்னேறுவதற்கான பல பயனுள்ள ஆலோசனைகள் மற்றும் நடைமுறை வழிகாட்டுதல்களை வழங்கினார். மேலும், மாணவர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்களை அளித்து, அந்த அமர்வை மிகவும் பயனுள்ள மற்றும் ஊக்கமளிக்கும் நிகழ்வாக மாற்றினார்.

திருமதி. ராஜலட்சுமி அவர்கள், தமது வாழ்க்கைப் பயணம், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் வெற்றிக்கான அனுபவங்களை மனதைத் தொடும் வகையில் பகிர்ந்து கொண்டார். அவரது ஊக்கமளிக்கும் உரை, மாணவர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் தன்னம்பிக்கையையும் புதிய உற்சாகத்தையும் அளித்தது. இந்நிகழ்ச்சி, சிறப்பு விருந்தினர்கள், கல்லூரியின் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் மற்றும் வழிகாட்டிகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி, அவர்களின் அளப்பரிய வழிகாட்டல், ஆதரவு மற்றும் பங்களிப்பிற்கு நன்றியைத் தெரிவித்து இனிதே நிறைவுற்றது.

# கந்தர்வகோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் தேசிய புள்ளிகள் தினம் கடைபிடிப்பு




கந்தர்வகோட்டை ஜீன் 29

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இராமானுஜர் கணித மன்றத்தின் சார்பில் தேசிய புள்ளியியல் தினம் கொண்டாடப்பட்டது.கணித மன்றத்தின் மாணவ தலைவி ரிதன்யா அனைவரையும் வரவேற்றார். தேசியப் புள்ளியியல் தினம் குறித்து தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய தலைவரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும் போது

அன்றாட வாழ்வில் புள்ளிவிவரங்களின் பயன்பாடு கொள்கைகளை வடிவமைப்பதிலும், வகுப்பதிலும் புள்ளிவிவரங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பது குறித்தும் புள்ளிவிவரம் மற்றும் பொருளாதாரத்திட்டமிடல் ஆகிய துறைகளில் ஈடு இணையற்ற பங்களிப்புகளை ஆற்றிய பேராசிரியர் பி.சி. மகாலனோபிஸ் அவர்களின்பிறந்ததினத்தை தேசியப் புள்ளிகள் தினமாக கொண்டாடுகிறோம். சமூகபொருளாதாரத் திட்டமிடலில் புள்ளிவிவரங்களின் பங்கு குறித்தும், ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தை வடிவமைப்பதில் புள்ளிவிவரங்களின் முக்கியப் பங்கை தேசிய புள்ளிவிவர தினம் எடுத்துக்காட்டுகிறது. பேராசிரியர் பி.சி. மகாலனோபிஸைக் கௌரவிப்பதன் மூலம்,

தரவுகளின் அடிப்படையிலான முடிவுகளின் ஆற்றலை இந்த நாள் குடிமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் நினைவூட்டுகிறது. அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது, கல்வி மற்றும் போட்டித் தேர்வுத் தயாரிப்பிற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், நவீன சமூகத்தில் புள்ளிவிவர அறிவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது என்று பேசினார்.

# தமிழ்நாட்டில் மனமகிழ் மன்றங்களுக்கான சிறப்பு கட்டணம் இருமடங்காக உயர்வு




சென்னை, ஜூன் 30

தமிழ்நாட்டில் எஃப்எல்2 மனமகிழ் மன்றங்களுக்கான சிறப்புக் கட்டணத்தை இருமடங்காக உயர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. மனமகிழ் மன்றங்கள் தொடங்க சிறப்புக் கட்டணமாக ரூ.15 லட்சம் இருந்த நிலையில் தற்போது அதனை ரூ.30 லட்சமாக உயர்த்தி அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

மதுபான உரிமத்திற்கான விண்ணப்பக்கட்டணம் ரூ.10,000 உரிமக் கட்டணம் ரூ.30,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 லட்சத்திற்கும் அதிக மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகளுக்கு ரூ.25 லட்சம்,

நகராட்சிகளுக்கு ரூ.15 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 10 லட்சத்திற்கு குறைவான மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகளுக்கு ரூ.20 லட்சம் என நிர்ணயம் அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

# ராமநாதபுரம் 5 வயது சிறுமி உயிரிழப்பு: குற்றவாளிகளை கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டும் பிரேமலதா விஜயகாந்த்



சென்னை, ஜூன் 30

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பாதாவது:

ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் நகரில் அதிகாலையில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த 5 வயது சிறுமி மாயமாகி, பின்னர் பக்கத்து வீட்டு கிணற்றில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. சிறுமி தவறி கிணற்றில் விழுந்து உயிரிழந்தாரா, அல்லது யாரேனும் கடத்திச் சென்று கொலை செய்து கிணற்றில் வீசியுள்ளனரா, அல்லது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளாரா என்பது குறித்து பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. பெண் குழந்தைகளுக்கு எதிரான இதுபோன்ற கொடூரச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது மிகுந்த கவலையளிக்கிறது.

எனவே, வீட்டில் பாதுகாப்பாக தூங்கிக்கொண்டிருக்கும் குழந்தைக்கே இந்த நிலை ஏற்பட்டால், பாதுகாப்பை தேடி மக்கள் எங்கு செல்வது? எத்தனை 'சிங்கப் பெண்' திட்டங்கள் இருந்தாலும், காவல்துறை இருந்தாலும், இதுபோன்ற சம்பவங்களை முழுமையாக தடுக்க முடியவில்லையே என்று மக்கள் வேதனை அடைந்துள்ளனர். இதற்கு நிரந்தரமான தீர்வு எப்போது கிடைக்கும்?. இந்தச் சம்பவம் குறித்து உண்மைக் குற்றவாளிகளை உடனடியாக கண்டறிந்து, சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையானதண்டனைபெற்றுத்தர வேண்டும்.

இந்தத் துயரமான சம்பவத்தில் உயிரிழந்த குழந்தையின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குழந்தையின் ஆன்மா சாந்தியடைய வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காப்பு காட்டிற்கு புளி சேகரிக்க சென்ற தொழிலாளி சிறுத்தை தாக்கி உயிரிழப்பு

மேட்டுப்பாளையம், ஜூன் 30

கோவை மாவட்டம் காரமடை அருகே உள்ள மூன்று குட்டை மலைகிராமத்தைச் சேர்ந்தவர் வெள்ளியங்கிரி (வயது 62). கூலித் தொழிலாளி. இவர் நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகம் கோப்பனாரி கிழக்கு பீட் மூன்று குட்டை காப்பு காட்டிற்கு புளி சேகரிக்க சென்று உள்ளார். எப்போதும் மாலை 4 மணிக்கு காட்டை விட்டு வீட்டுக்கு வருவது வழக்கம். ஆனால் அந்த நேரத்தில் அவர் வீட்டுக்கு திரும்பி வரவில்லை. இதுகுறித்து பெரியநாயக்கன்பாளையம் வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற வனத்துறையினர் மலை கிராம மக்களுடன் சேர்ந்து வெள்ளியங்கிரியை தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் இருட்ட தொடங்கியதால் தேடும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மீண்டும் நேற்று காலை வனத்துறையினர் கிராம மக்கள் உதவியுடன் காணாமல் போன வெள்ளியகிரியை தேடும் பணியில்யில் ஈடுபட்டனர்.

அப்போது பகல் 1 மணிக்கு மூன்று குட்டை காப்பு காட்டில் உடல் மிகவும் சிதைந்த நிலையில் மாயமான வெள்ளியங்கிரி பிணமாக கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சிறுத்தை தாக்கி அவரது உடலை கவ்வி வனப்பகுதிக்குள் இழுத்துச் சென்று உடல் பகுதி முழுவதும் தின்றுவிட்டு உடலை அங்கேயே போட்டு விட்டு சென்றதாக தெரிகிறது.

இதுகுறித்து தகவல் கிடைக்கப்பெற்றதும் காரமடை போலீசார் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் வனச்சரக அலுவலர் மனோஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். போலீசார் பிணத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து தகவல் கிடைக்க பெற்றதும் என். சுனில் ஆனந்த் எம்.எல்.ஏ. சம்பவ இடத்திற்கு சென்றார். மலை கிராம மக்களிடம் நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தார். இதையடுத்து உடனே அவர் மாவட்ட வன அலுவல ரோடு செல்போனில் தொடர்பு கொண்டு கிராம மக்களின் அச்சத்தை போக்க சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும். மேலும் அவரது குடும்பத்தினருக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சிறுத்தை தாக்கி தொழிலாளி பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# நாகர்கோவில் அருகே கொடூரம்: உறங்கிக் கொண்டிருந்த தொழிலாளி தலையில் கல்லைப்போட்டு கொலை

நாகர்கோவில், ஜூன் 30

நாகர்கோவில் அருகே உள்ள சுசீந்திரம் போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட ஒரு தனியார் பள்ளியில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணியில் வெளி மாவட்டங்களை சேர்ந்த தொழிலாளர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த சரவணகுமார் (வயது 35) என்ற தொழிலாளி கடந்த 10 நாட்களுக்கு முன்பு இங்கு வேலைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்தநிலையில் நேற்று சரவணகுமாரும். அவருடன் வேலை பார்த்து வந்த மதுரை மாவட்டத்தை சேர்ந்த தங்கபாண்டி (40) என்ற தொழிலாளியும் இணைந்து மது அருந்தியுள்ளனர். அப்போது இருவருக்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டு, தகராறாக மாறியது. தகராறு முற்றியதால் அவர்களை சக தொழிலாளர்கள் சமாதானம் செய்து விலக்கி விட்டனர். இதையடுத்துஇருவரில் ஒருவரை சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தால் பிரச்சினை முடிவுக்கு வரும் என்று சக தொழிலாளர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி தங்கபாண்டியை ஊருக்கு அனுப்பி வைப்பதற்காக சக தொழிலாளர்கள் அவரை நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். ஆனால் நெல்லை ரெயில் நிலையத்தில் நடைபெற்று வரும் யார்டு விரிவாக்க பணிகள் காரணமாக அந்த மார்க்கத்தில் செல்லும் ரெயில்கள் ரத்து செய்யப்பட்டிருந்தன. இதனால் ஏமாற்றமடைந்த தங்கபாண்டி மீண்டும் கட்டுமான பணி நடைபெறும் இடத்திற்கே திரும்பி வந்தார்.

அப்போது, சரவணகுமார் அங்கு மதுபோதையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். இதை கண்டதும் தங்கபாண்டிக்கு மீண்டும் ஆத்திரம் ஏற்பட்டது. உடனே அவர் அருகில் கிடந்த சிமெண்டு கல்லை எடுத்து சரவணகுமாரின் தலையில் போட்டார். இந்த கொடூர தாக்குதலில் படுகாயமடைந்த சரவணகுமார், சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து தங்கபாண்டி அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

இதை பார்த்து சக தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் சுசீந்திரம் போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, சரவணகுமாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், தப்பியோடிய தங்கபாண்டியை பிடிப்பதற்காக போலீசார் அந்தபகுதி முழுவதும் தீவிரமாக தேடி வருகின்றனர். முதற்கட்டமாக சக தொழிலாளர்களை போலீஸ் நிலையம்அழைத்துசென்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தொழிலாளி அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க. மாணவர் அணி ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுப்பு



சென்னை, ஜூன் 30

த.வெ.க. அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று

சமூக வலைதளங்களில் வைரலாக பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த வீடியோ குறித்து விளக்கமளித்த அமைச்சர் டி.சரத்குமார், தனது குழந்தைக்கு மாத்திரையை பொடியாக்கி கொடுத்ததாகவும், தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும், இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, அமைச்சர் டி.சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. மாணவர்அணி சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் சென்னை எழும்பூரில் தி.மு.க. மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டத்திற்கான மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு உரிய அனுமதி பெறாததால் மேடை அமைக்க அனுமதிக்க முடியாது என கூறினர்.

பொது இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த 5 நாட்களுக்கு முன்னதாக அனுமதி பெற வேண்டும் எனவும், போராட்டத்திற்கு மாநகர காவல் ஆணையரிடம் முன் அனுமதி பெற வேண்டும் எனவும் போலீசார் தெரிவித்தனர்.

இதையடுத்து தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகளுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் காவல்துறை வாகனங்களில் ஏற்றி அழைத்துச் சென்றனர். சென்னையைப் போல் மதுரை, புதுக்கோட்டை, திருவள்ளூரிலும் தி.மு.க. மாணவர் அணி போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார் எம்.ஆர்.விஜயபாஸ்கர்



சென்னை, ஜூன் 30

கரூர் அதிமுக எம்.எல்.ஏ. எம்.ஆர்.விஜயபாஸ்கர் இன்று தன்னுடைய எம்.எல்.ஏ.பதவியைராஜினாமா செய்துள்ளார்.

தமிழகத்தில் காலியாக உள்ள திருச்சி கிழக்கு, மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை ஆகிய 6 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. அதற்கான ஆயத்தப் பணிகளில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. இடைத்தேர்தல் நடைபெற உள்ள 6 தொகுதிகளில் திருச்சி கிழக்கு தொகுதியை தவிர்த்து, ஏனைய 5 தொகுதிகளிலும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் ராஜினாமா செய்ததால் காலியானது.

இந்த நிலையில் மேலும் ஒரு அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.கரூர்தொகுதி அ.தி.மு.க.எம்.எல்.ஏ.வும், முன்னாள் அமைச்சருமான எம்.ஆர்.விஜயபாஸ்கர் சென்னை தலைமைச் செயலகத்திற்கு வந்து, சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை சந்தித்து தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இவரும் த.வெ.க.வில் இணைய இருப்பதாக கூறப்படுகிறது.

அ.தி.மு.க.வில் இருந்து எம்.ஆர்.விஜயபாஸ்கர் வெளியேறியதன் மூலம் சட்டசபையில் அக்கட்சி எம்.எல்.ஏ.க்களின் பலம் 47ல் இருந்து 41 ஆக குறைந்துள்ளது. இப்படி, ஒவ்வொரு எம்.எல்.ஏ.வாக அ.தி.மு.க.வை விட்டு வெளியேறுவது, அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை மட்டுமின்றி, அ.தி.மு.க.வினரையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

இதனையடுத்து எம்.ஆர். விஜயபாஸ்கரின் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சட்டமன்றப் பேரவை விதி 21ன் படி கரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தனது பதவி விலகல் கடிதத்தை தம் கைப்பட எழுதி என்னிடம் அளித்துள்ளார்.

அவர் அளித்த பதவி விலகல் கடிதம் சட்டமன்றப் பேரவை விதி 22ன் படி முறையாக உள்ளதால் அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.ஆர். விஜயபாஸ்கரின் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து கரூர் தொகுதியும் காலியானதாக விரைவில் அறிவிக்கப்படும். இதன்மூலம் தமிழகத்தில் காலியான தொகுதிகளின் எண்ணிக்கையும் 7 ஆக உயர்ந்துள்ளது. தொடர்ந்து விரைவில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில் கரூர் தொகுதியும் சேர்க்கப்படும் என கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் தேர்தலுக்குப் பிறகு அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்து வருவது அந்தந்த தொகுதி மக்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வரத்து குறைவால் கேரட் விலை அதிகரிப்பு: அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரம்



நீலகிரி, ஜூன் 30

நீலகிரி மாவட்டத்தில் பச்சை தேயிலைக்கு அடுத்தபடியாக மலைக்காய்கறிகள் சாகுபடியில் அதிக அளவிலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 3,500 முதல் 4,000 எக்டேர் பரப்பளவு வரை கேரட் பயிரிடப்படுகிறது. நீலகிரியில் விளையும் கேரட், அதன் சுவை மற்றும் தரத்திற்காக தனி மவுசு உள்ளது.

பருவம் மற்றும் சந்தை தேவையைப் பொறுத்து, நீலகிரியில் இருந்து தினமும் சராசரியாக 100 முதல் 200 டன் கேரட் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இங்கு விளையும் மலைக்காய்கறிகள் சென்னை, மதுரை, திருச்சி உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் கர்நாடகா, கேரளம் உள்ளிட்ட மாநிலங்களுக்கும் ஆண்டுதோறும் அனுப்பி வைக்கப்படுகிறது.

வழக்கமாக கேரட்டுக்கு நிலையில்லா விலை இருந்தாலும், அறுவடை நாட்களுக்குள் அறுவடை செய்யவேண்டியசூழ்நிலை உள்ளது. இந்தநிலையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன், ஜூலையில் மலைக்காய்கறிகளின் விலையில்சரிவு ஏற்படுவது வழக்கம். இந்த ஆண்டு பருவமழை காலதாமதமானதால், வரத்து குறைந்து மலைக்காய்கறிகள் விலை உயர்ந்துஉள்ளது. குறிப்பாக கேரட் விலை கடந்த மாதத்தை விட இருமடங்கு அதிகரித்துள்ளது.

நீலகிரியில் ஒரு கிலோ கேரட் ரூ.23க்கு கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது ரூ.50 முதல் ரூ.60க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மேட்டுப்பாளையத்தில் கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கேரட் விலை உயர்ந்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கேரட் மட்டுமல்லாமல் பீட்ரூட் உள்பட மற்ற காய்கறிகளின் விலையும் உயர்ந்து உள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக கேரட் அறுவடை பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# அரசு பள்ளியில் பூட்டை உடைத்து திருட்டு: கையடக்க கணினிகளை திருடி சென்ற மர்ம நபர்கள்

தக்கலை, ஜூன் 30

தக்கலை அருகே அரசு பள்ளியில் பூட்டை உடைத்து கையடக்க கணினிகளை திருடி சென்ற மர்ம நபர்களை போலீசார் தேடி வருகிறார்கள்.

தக்கலை அருகே உள்ள மூலச்சலில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. இப்பள்ளி வளாகத்தில் அரசு தொடக்கப் பள்ளியும் செயப்பட்டு வருகிறது. கடந்த 25ந் தேதி மாலையில் வகுப்புகள் முடிந்த பிறகு தலைமை ஆசிரியர் லாரன்ஸ் அலுவலக அறையை பூட்டி விட்டு சென்றார்.

இதையடுத்து நேற்று காலையில் வகுப்பறைகளை சுத்தம் செய்வதற்காக துப்புரவு பணியாளர் பள்ளிக்கு வந்தார். அப்போது தலைமை ஆசிரியரின் அறை கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்துகிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து தலைமை ஆசிரியருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனே, தலைமை ஆசிரியர் லாரன்ஸ் விரைந்து வந்து அறையின் உள்ளே சென்று பார்த்தபோது மாணவர்களுக்கு கல்வி கற்று கொடுப்பதற்கு பயன்படுத்தும் 3 கையடக்க கணினிகள் (டேப்லெட்) திருடப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து தக்கலை போலீஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது யாரோ மர்ம நபர்கள் அலுவலக அறையின் பூட்டை உடைத்து உள்ளே சென்று கையடக்க கணினிகளை திருடி சென்றது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து பள்ளியில் திருடிய மர்ம நபர்களை தேடி வருகிறார்கள். இதற்காக அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்து வருகிறார்கள்.

# கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தேர்வில் முறைகேடு: தமிழக அரசுக்கு திருமாவளவன் வேண்டுகோள்



சென்னை, ஜூன் 30

விடுதலைசிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்திருப்பதாவது;

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக இருந்த 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு 'ஆசி\ரியர் தேர்வு வாரியம்,' கடந்த 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் தேதி எழுத்துத் தேர்வுநடத்தியது.அத்தேர்வின் முடிவுகள் 2026 ஜூன்25 ஆம் தேதி வெளியானது. இம்முடிவுகள், தேர்வு எழுதியவர்களில் ஏராளமானவர்களைப் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளன. இதில் பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, இத்தேர்வு முடிவுகளை அரசு ரத்து செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது.

உதவி பேராசிரியர் தேர்வு முடிவுகளில் முறைகேடுகள் நடந்துள்ளன என்பதற்கு தேர்வர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களே சான்றாக உள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழ் முதல்தாளில் ஒருவர் 150க்கு 111 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார். ஆனால், அதே நபர் தமிழ் இரண்டாம் தாளில் 50க்கு பூஜ்ஜியம் மட்டுமே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொருவர் தமிழ் முதல் தாளில் 150க்கு 54 மதிப்பெண்கள் பெற்றுள்ள நிலையில், இரண்டாம் தாளில் 50க்கு 49 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இது போல பலருக்கு நடந்துள்ளது. பூஜ்யம் மட்டுமே வாங்கும் அளவுக்கா தேர்வு எழுதக் கூடியவர்களின் தகுதி இருக்கும்? முனைவர் பட்டம் பெற்றவர்களா பூஜ்யம் பெறும் நிலையில் தேர்வு எழுதி இருப்பார்கள்? இது நம்பக்கூடிய ஒன்றாக இல்லை. எனவே, தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்ததில் முறைகேடுகள் நடந்துள்ளன என்கிற வலுவான அய்யத்தை உருவாக்கியுள்ளது. இது உள்நோக்கமின்றி நடந்த குளறுபடியாகத் தோன்றவில்லை; மாறாக, திட்டமிட்டு செய்யப்பட்ட முறைகேடாகவே தோன்றுகிறது. இத்தேர்வுகள் நியாயமாக நடத்தப்படும் என்று நம்பிக்கை வைத்து பல்லாயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அவர்களின் நம்பிக்கைகள் சிதைக்கப்பட்டுள்ளன.

எனவே, இது குறித்து உரிய விசாரணை நடத்திட அரசு ஆணையிட வேண்டும். விசாரணை முடியும் வரை பணிநியமன நடைமுறைகளையும் நிறுத்தி வைக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபாட்டிலுக்கு ரூ.10 வாங்குவது விலை பட்டியலுக்குள் கொண்டு வரப்படும்: அமைச்சர் விக்னேஷ்



கோவை, ஜூன் 30

கோவையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ் நிருபர்களிடம் கூறியதாவது: டாஸ்மாக் நிர்வாகத்தில் பல மாற்றங்களை கொண்டு வர உள்ளோம். ஆண்டுக்கு மட்டும் ரூ.1,000 கோடி, கட்சிகளுக்கு சென்று கொண்டு இருந்தது. தற்போது அதை அரசுக்கு கொண்டு வர வழிவகை செய்து உள்ளோம். டாஸ்மாக் மட்டுமல்லாமல் தனியார் மதுபான விடுதிகளிலும் பார்ட்டி பண்ட் வாங்கி கொண்டு இருந்தனர். அதையும் அரசுக்கு நேரடியாக கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. மதுபாட்டிலுக்கு 10 ரூபாய் தொடர்பாக ஒரு சிறப்பு சட்டம் கொண்டு வர உள்ளோம். விலை பட்டியலில் உள்ள தொகையை மட்டும்தான் வாங்க வேண்டும். இனி ரூ.10க்கு தனியாக ஸ்டிக்கர் ஒட்டக்கூடாது. இனிமேல் இந்த முறையை தான் கையாள போகிறோம். அதாவது பாட்டிலுக்கு தனியாக ரூ.10 வாங்கப்படாது. அந்த தொகை விலைபட்டியலிலேயே இருக்கும். பாட்டிலை திரும்ப கொடுத்தால் மது வாங்குபவர் ரூ.10ஐ வாங்கிக்கொள்ளலாம். அதையும் மீறி பாட்டிலுக்கு ரூ.10 வசூலித்தால் ஊழியர்களை டிஸ்மிஸ் செய்யும் அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். டாஸ்மாக் ஊழியர்கள் குறைந்த வருமானத்தில் பணி செய்து வந்ததால், கடந்த ஆட்சியாளர்கள் பணம்வசூலிக்கும்சூழலை ஏற்படுத்தி உள்ளனர். டாஸ்மாக் ஊழியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். 20 ஆண்டாக அவர்களின் கோரிக்கை நிறைவேற்ற ப்படாதது வேதனை அளிக்கிறது. அதை சரிசெய்யும் வேலையில் அரசு இறங்கி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

30.06.2026

# கோவில்பட்டியில் 71 பாக்கெட் புகையிலை பொருட்கள் பறிமுதல்: 3 பேர் கைது




கடந்த 11 ஆண்டுகளாக வேலை இழந்து உள்ள 305 தொழிலாளர்கள் வேலை வழங்க வேண்டி என சென்னை சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இது தொடர்பாக செய்தியாளகளிடம் பேசிய செங்கை அண்ணா மாவட்ட ஜனநாயக தொழிலாளர் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் இரணியப்பன்.

செங்கல்பட்டு மாவட்டம் மாம்பாக்கத்தில் இயங்கி வரும் டைமண்ட் இன்ஜினியரிங் எமரால்டு இன்ஜினியரிங், காயாரில் ரூபி இன்ஜினியரிங்.அகிய தொழிற்சாலையில் உள்ள சுமார் 305 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளது இது தொடர்பாக நிர்வாகிகள் எங்களை ஏன் வேலை நீக்கம் செய்தீர்கள் என்றால் நீங்கள் மே தினம் கொண்டாடி கொடியேற்றினிர்கள் தொழிலாளர்கள் எந்த சங்கத்திலும் இருக்க கூடாது தொழிற்சங்கத்தில் இல்லாதவர்களுக்கு வேலை உண்டு சங்கத்தில் இருந்தால் வேலையில்லை என சொல்லுகிறார்கள் தொழிலாளருக்கு வேலை வேண்டி பல்வேறு போராட்டங்களை தொழிலாளர்கள் தொடர்ந்து நடத்தி வந்தனர்

நிர்வாகம் தொழிலாளர்கள் மீண்டும் பணிக்கு எடுக்காததால் தொழிலாளர்கள் உதவி ஆணையர் திருப்பத்தூர் அவர்கள் முன் கடந்த பேச்சு வார்த்தையில் சமரசம் ஏற்படாததால் சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று இறுதி தீர்ப்பு வழங்கும் நிலையில் நிர்வாக தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் வங்கியின் நிர்வாகத்தின் பெயரில் கடன் பெற்று நிலையில் வழக்கு உள்ளதால் தொழிலாளர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க முடியாது தேசியநிறுவனசட்டமேல்முறையிட்டு தீர்ப்பாயத்தின் தீர்ப்பு வந்தால் தான் தொழிலாளர்கள் நீதிமன்றம் விசாரிக்க முடியும் என்று தொழிலாளர் நீதிமன்றத்தில் நிர்வாகம் கடிதம் கொடுத்ததால் தொழிலாளர் நீதிமன்றம் 2023ல் வழக்கை விசாரணை இன்றி நிறுத்தி வைத்துள்ளது

இதனால் கடந்த 11 ஆண்டுகளாக தொழிலாளர்கள் அவருடைய குடும்பங்கள் நீதி கிடைக்காமல் நீதிமன்றம் கதவுகளை தட்டிக் கொண்டிருக்கிறார்கள் இந்த பிரச்சனையில் தேசிய நிறுவனசட்டமேல்முறையீட்டுதீர்ப்பாயம் கடந்த மூன்று ஆண்டுகளாக தீர்வு வழங்காமல் கால தாமதம் படிக்கப்படுகிறது

இந்த பிரச்சனையை தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் கவனத்திற்கு மற்றும் தமிழக முதல் கவனத்தில் கொண்டு செல்லும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது இது தொடர்பாக Configuration துறை அமைச்சரை சந்தித்து முறையிட உள்ளோம் எங்களுக்கு நீதி வழங்க வேண்டும் இல்லையென்றால் தொடர்ந்து எங்களுடைய போராட்டம் தொடரும் என தெரிவித்தார் இதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெறுவோம் செல்லூர் ராஜு

மதுரை, ஜூன் 30

மதுரை மாநகர அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் பனகல் சாலையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு தலை மையில் நடந்தது. கூட்டத்தில் மறைந்த இயக்குனர்கள் பாரதிராஜா, பாக்யராஜ் ஆகியோருக்கு இரங்கள் தீர்மானம் நிறைவேற்றி மவுன அஞ்சலி செலுத்தப்ப ட்டது. பின்னர் செல்லூர் ராஜுநிருபர்களுக்கு பேட்டி அளித்த போது கூறியதாவது: அ.தி.மு.க.வில் இருந்து மாற்றுக்கட்சிக்கு சிலர் சென்றுள்ளனர். நான் சிறு வயதிலேயே எம்.ஜி.ஆர்.மன்ற நிர்வாகியாக இருந்தவன். நான் எங்கும் செல்லமாட்டேன். அ.தி.மு.க.வில் கடைசி வரை தொண்டனாககூட இருப்பேன். என்னை பற்றி கேலி கிண்டல் பண்ணுவார்கள். அதை பற்றி நான் கவலை படுவதில்லை. தி.மு.க., அ.தி.மு.க. குறித்து பேசநிர்மல்குமார் என்ன தூதுவரா?. அமைச்சர் அதிகம் பேசுகிறார். எங்கள் கட்சியில் இருந்தார். அவர் அங்கு சென்று அமைச்சர் ஆகி விட்டார். இப்போது அவர் மதுரையில் சொகுசாக செல்லும் சாலைகள், பாலங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்ததுதான். மதுரைக்கு அமைச்சராக நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்? என சொல்லுங்கள். எங்களுடைய வாக்குகள்தான் த.வெ.க.விற்கு சென்றது. இனி அது நடக்காது. அ.தி.மு.க. பாசமான, குடும்பமான கட்சி. அனைவரும் நண்பர்களாக, பிள்ளைகளாக, தம்பிகளாக இருந்தார்கள். அவர்கள் எதற்காக அங்கு சென்றார்கள் என தெரியவில்லை. ஆனால் அ.தி.மு.க.வில் இருந்து தொண்டர்கள் வெளியேறவில்லை. த.வெ.க. மின்மினிப்பூச்சி, பட்டாம்பூச்சி போல கானல் நீராக மாறும். வருகிற உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (30.06.2026)

புதிய முயற்சிகளில் முன்னேற்றம். குடும்பத்தில் மகிழ்ச்சி. செலவுகளில் கட்டுப்பாடு நல்லது.

பணவரவு சீராக இருக்கும். வேலை தொடர்பான நல்ல செய்தி கிடைக்கலாம்.

முக்கிய முடிவுகளை அமைதியாக எடுக்கவும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

உடல்நலத்தில் கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

தொழிலில் வளர்ச்சி வாய்ப்பு. குடும்பத்தினருடன் நல்ல நேரம் அமையும்.

பயணவாய்ப்புகள் உருவாகலாம். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணலாம்.

நிலுவையில் இருந்த வேலைகள் முடிவடையும். உறவுகளில் புரிதல் அதிகரிக்கும்.

பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி. முதலீட்டில் கவனம் அவசியம்.

புதியவாய்ப்புகள்கிடைக்கலாம். மாணவர்களுக்கு சாதகமான நாள்.

பணியில் பொறுப்புகள் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட்டால் நல்ல பலன்.

நீண்டநாள்ஆசைகள்நிறைவேற வாய்ப்பு. குடும்ப ஆதரவு கிடைக்கும்.

மனநிம்மதி அதிகரிக்கும். வருமானம் உயரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

# கடலூர் அருகே சோகம்; போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தை திடீர் உயிரிழப்பு

கடலூர் அடுத்த தூக்கணாம்பாக்கம் அருகே உள்ள நல்லாத்தூரை சேர்ந்தவர் ராஜி (வயது 27). டிரைவர். இவரது மனைவி ராஜம். இவர்களுக்கு 1 ½ வயதில் ஹரிஹரன் என்ற ஆண் குழந்தை இருந்தது.

தமிழகம் முழுவதும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடந்த நிலையில், தனது குழந்தைக்கு சொட்டு மருந்து கொடுப்பதற்காக நல்லாத்தூர் துணை சுகாதார நிலையத்திற்கு ராஜம் ஹரிஹரனை தூக்கிச்சென்றார். அங்கு குழந்தைக்கு சொட்டுமருந்து கொடுக்கப்பட்ட பின், தனது குழந்தையுடன் அவர் வீட்டுக்கு வந்தார்.

பின்னர், குழந்தைக்கு புட்டிப்பால் கொடுத்து தூங்க வைத்தார். மதியம் ஹரிஹரனை பார்த்தபோது மயங்கிய நிலையில் இருந்தான். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் உடனடியாக குழந்தையை தூக்கணாம்பாக்கம் அரசு சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள், வரும் வழியிலேயே குழந்தை ஹரிஹரன் பரிதாபமாக உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

பின்னர் குழந்தை ஹரிஹரன் உடலை பிரேத பரிசோதனைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பிரேத பரிசோதனை முடிவுக்கு பின்னரே, குழந்தையின் இறப்புக்கான காரணம் தெரியவரும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி விமான நிலையத்தில் ரூ.6 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

திருச்சி, ஜூன் 30

தாய்லாந்தில் இருந்து கடத்தி வந்த ரூ.6 கோடி மதிப்பிலான போதைப்பொருளை திருச்சி விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக சிவகங்கை பயணியை போலீசார் கைது செய்தனர்.

திருச்சி விமான நிலையத்திற்கு பல்வேறு நாடுகளில் இருந்து விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக துபாய், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் இருந்து அதிக அளவில் விமானங்கள் இயக்கப்படுகின்றன. மேலும் மலேசியாவில் இருந்து தாய்லாந்துக்குஇணைப்புவிமானங்கள் மூலம் விமான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மலேசியாவில் இருந்து ஏர் ஏசியா விமானம் நேற்று முன்தினம் இரவு திருச்சி வந்தது. அந்த விமானத்தில் வந்த பயணிகளின் உடைமைகளை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது ஒரு பயணியின் உடைமையில் ரூ.6 கோடி மதிப்பிலான 6 கிலோ ஹைட்ரோபோனிக் என்ற போதைப்பொருள் இருந்தது.

இது குறித்து அந்த பயணியிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இதில் அவர், சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த முகமது அலி (வயது 36) என்பதும், தாய்லாந்தில் இருந்து மலேசியா வழியாக திருச்சிக்கு விமானத்தில் வந்ததும், அவர் தனது உடைமையில் மறைத்து போதைப்பொருளை கடத்தி வந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள், போதைப்பொருளை பறிமுதல் செய்தனர். மேலும் முகமது அலியை விமான நிலைய போலீசில் ஒப்படைத்தனர். போலீசார் அவர் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். இந்த சம்பவத்தால் விமான நிலைய பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# அழகு, திறமையை காட்டிலும் ஆரோக்கியம்தான் நடிகைகளின் அடிப்படை ராஷ்மிகா மந்தனா



இந்திய சினிமாவின் முன்னணி நடிகையான ராஷ்மிகா, தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவை காதலித்து திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்கு பிறகும் பிசியாக படங்களில் நடித்து வருகிறார்.

சமீபத்தில் அவரது நடிப்பில் 'காக்டெயில் 2' படம் வெளியாகிகவனம்ஈர்த்தது. இதற்கிடையில்நடிகைகளுக்கு அடிப்படையே ஆரோக்கியம்தான் என்று ராஷ்மிகா தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறும்போது, "அழகு, திறமையை காட்டிலும் ஆரோக்கியம்தான் நடிகைகளின் அடிப்படை விஷயமாகும்.

இங்கு நடிகர்களை போல நடிகைகளும் நீண்ட காலம் சினிமாவில் நிலைத்திருக்க ஆரோக்கியம்தான் அவசியமாகும். முறையான உடற்பயிற்சி மற்றும் உணவு கட்டுப்பாடு இதனை நமக்கு தரும். எனவே சோம்பேறித்தனம் பார்க்காமல் பெண்கள் அனைவருமே உடற்பயிற்சி செய்யுங்கள். கிடைக்கும் நேரத்தில் யோகா உள்ளிட்ட பயிற்சிகளிலும் ஈடுபடுங்கள்" என்றார்.

# ஜி.வி.பிரகாஷின் "இம்மார்ட்டல்" திரைப்படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




மாரியப்பன் சின்னா இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் 'இம்மார்ட்டல்' படம் ஜூலை 23ம் தேதி வெளியாகவுள்ளது.

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளராகவும் நடிகராகவும் வலம் வருபவர் ஜி.வி.பிரகாஷ். இவரது நடிப்பில் சமீபத்தில் ஹாப்பி ராஜ் படம் வெளியானது. இந்த படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அந்த படத்தை தொடர்ந்து, அறிமுக இயக்குனர் மாரியப்பன்சின்னா இயக்கும் 'இம்மார்ட்டல்' படத்தில் நடித்துள்ளார். இதில் கதாநாயகியாக கயாடு லோஹர் நடித்துள்ளார்.

டி.எம்.கார்த்திக், லொள்ளு சபா மாறன், ஆதித்யா கதிர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஏகே பிலிம் பேக்டரி நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார்.

ரொமான்ஸ், திரில்லர், பேன்டஸி கதைக்களத்தில் உருவாகி வந்த இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

"இம்மார்ட்டல்" திரைப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிளை படக்குழு வெளியிட்டுள்ளது. 'லவ்யூ லவ்யூ காட்டேரி' பாடலை ஷாலி எழுத சாம் சிஎஸ், ரேஷ்மா ஷ்யாம் இணைந்து பாடியுள்ளனர்.

இந்நிலையில், மாரியப்பன் சின்னா இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் 'இம்மார்ட்டல்' படம் ஜூலை 23ம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# சூர்யாவின் 48வது படத்தின் பூஜை

சூர்யா நடித்திருந்த 'கருப்பு' திரைப்படம் கடந்த மே 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது. ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் உருவான அப்படத்திற்கு வசூல் ரீதியான நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனை தொடர்ந்து சூர்யாவின் 46 ஆவது படமான 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படம் ஆகஸ்ட் 14ஆம் தேதி திரைக்கு வருகிறது. சூர்யாவின் 47ஆவது படத்தை, 'ஆவேஷம்' பட இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கிவருகிறார்.

ஞானவேல் இயக்கத்தில் சூர்யா நடிக்க உள்ள இப்படத்தை தயாரிக்க உள்ளதாக ஹோம்பாலே நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளது. 'கருப்பு' படத்தைத் தொடர்ந்து சாய் அபயங்கர், சூர்யாவின் இந்தப் படத்திற்கும் இசையமைக்கிறார். கயாடு லோஹர் நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார். 'ஜெய் பீம்' வெற்றிக்குப் பிறகு மீண்டும் அதே கூட்டணி இணைந்திருப்பதால், ரசிகர்களிடம் இப்படம் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

கர்நாடகத்தைச் சேர்ந்த பிரபல திரைப்பட தயாரிப்பு நிறுவனம் ஹொம்பாலே பிலிம்ஸ். கே.ஜி.எப், சலார், காந்தாரா என இந்தி அளவில் மிகப்பெரிய வெற்றிபெற்ற படங்களை இந்நிறுவனம் தயாரித்துள்ளது.

சூர்யாவின் 48வது படத்திற்கான பூஜை இன்று நடைபெற்றது. இதில் பேசிய தயாரிப்பாளர் விஜய் கிரகந்தூர், "வணிக வெற்றியையும், விமர்சகர்களின் பாராட்டையும் ஒருசேரப் பெறும் அசாத்திய திறமை கொண்டவர் சூர்யா. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மக்களைக் கொண்டாடும் சூர்யா மற்றும் அழுத்தமான கதைகளை செதுக்கும் த.செ.ஞானவேல் ஆகிய இருவரையும் எங்களது ஹொம்பாலே குடும்பத்திற்கு வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறோம். இந்த படத்தில் 'எதிர்பாராததை எதிர்பாருங்கள்" என்று பேசினார்.

நடிகை கயாது லோகர் சூர்யாவுக்கு ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார். மேலும், பிரகாஷ்ராஜ், யோகிபாபு, குமரவேல் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். இத்திரைப்படம் பான் இந்தி திரைப்படமாக தயாராக உள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஜூலை மாதம் 22ஆம் தேதி முதல் விறுவிறுப்பாகத் தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# 3வது டெஸ்ட் இங்கிலாந்தை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய நியூசிலாந்து



இங்கிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்டில் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. முதல் இரண்டு டெஸ்ட்கள் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்று, தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இரு அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாட்டிங்காமில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பேட்டிங் தேர்வு செய்து, முதல் இன்னிங்சில் 438 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 88.2 ஓவர்களில் 354 ரன்களுக்கு ஆல்அவுட்டானது. இதனையடுத்து 84 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து, 288 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

இதையடுத்து 373 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. ஆனால் நியூசிலாந்து அணியின் துல்லியமான பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல், இங்கிலாந்து அணி 212 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 160 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த தொடரின் முதல் போட்டியில் தோல்வியடைந்த போதிலும், அடுத்த இரண்டு போட்டிகளிலும் கம்பேக் கொடுத்து நியூசிலாந்து அணி தொடரை வென்றுள்ளது.

# 2028 ஒலிம்பிக் தகுதிபெற்ற இந்திய மகளிர் கிரிக்கெட் அணி... ஆண்கள் அணிக்கு இப்படியொரு டுவிஸ்ட்டா? முழு விவரம்



2028ம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய மகளிர் கிரிக்கெட் அணி தகுதி பெற்றுள்ளது.

128 ஆண்டுகளுக்குப் பிறகு கிரிக்கெட் மீண்டும் ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்றுள்ளது. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தலா 6 அணிகள் பங்கேற்கஉள்ளன. டி20வடிவில் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

பெண்கள் பிரிவை பொறுத்தவரை தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஐசிசி டி20 உலகக் கோப்பை தொடரே, ஒலிம்பிக்கிற்கான முதன்மை தகுதி தொடராக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசியா, ஓசியானியா, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய நான்கு கண்டங்களில் இருந்து சிறந்த அணிகள் தகுதிபெறும் என்று ஐசிசி அறிவித்தது.

இதன்படி, ஆசிய கண்டத்தில் சிறந்த அணியாக இந்தியா தகுதி பெற்றுள்ளது. இந்தியாவுடன் ஆஸ்திரேலியா, கிரேட்பிரிட்டன்(இங்கிலாந்து)மற்றும்தென்ஆப்பிரிக்காஆகியஅணிகளும்2028ஒலிம்பிக்கில்இடம்பிடித்துள்ளன.

ஆண்கள் அணிக்கான தகுதி விதிமுறைகள் பெண்கள் பிரிவிலிருந்து முற்றிலும் வேறுபட்டுள்ளன. உலகக் கோப்பை முடிவுகள் அடிப்படையில் அல்லாமல், ஐசிசியின் டி20 சர்வதேச தரவரிசை அடிப்படையில் அணிகள் தேர்வு செய்யப்படுகின்றன.

அதனபடி, 2026 டிசம்பர் 31ம் தேதி நிலவரப்படி, ஆசிய நாடுகளில் தரவரிசை பட்டியலில் இந்திய அணி டாப் இடத்தில் இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் இந்திய ஆண்கள் அணி ஒலிம்பிக்கிற்கு தகுதி பெறும்.

போட்டியை நடத்தும் அமெரிக்க அணி, குறைந்தபட்ச தரவரிசை தகுதியை பூர்த்தி செய்தால் அதற்கு நேரடி இடம் வழங்கப்படும். மீதமுள்ள கடைசி அணி, 2027ம் ஆண்டு நடைபெறவுள்ள ஐசிசி ஒலிம்பிக் தகுதி சுற்று போட்டி மூலம் தேர்வு செய்யப்படும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.